3rd April 1958]

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, by giving extension to certain kinds of officers, do not the Government think that it will curb the enthusiasm of people who are waiting for promotion ?

The Hon. Sri P. KAKKAN : கீழே இருக்கும் உத்தியோகஸ்தர்கள் தங்கள் பதவி உயர்வை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்பது சர்க்காருக்கும் தெரியும். இருந்தாலும், அவருடைய (ஸ்ரீ ப்ரெடெரிக்கின்) சேவை இப்போது அரசாங்கத்திற்கு இன்றியமையாததாக இருப்பதால், அவருக்கு ஒரு வருஷத்திற்கு உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கீழே இருக்கும் உத்தியோகஸ்தர்களின் நலன்களை அரசாங்கம் நிச்சயமாக எப்போதும் கவனிக்கும்.

Mr. SPEAKER : Question Nos. 536 and 537 may be taken up together. 8-50 a.m.

Orphanages

* 536 *Q.*—**Sri M. S. SELVARAJAN**: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of orphanages, districtwar;

(*b*) the strength in each, boys and girls; and

(*c*) the expenditure incurred on these institutions districtwar?

The Hon. Sri C. SUBRAMANIAM: The hon. Member is referred to the statement[a] placed on the table of the House, furnishing the total strength of children in, and the boarding grants paid to, each of the orphanages in this State in 1957–58.

Details of the number of boys and girls separately in regard to each orphanage are not readily available.

* 537 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : Will the Hon. the Minister for Home be pleased to state the grant given to each of the several kinds of orphanages in the State in 1957–58?

The Hon. Sri C. SUBRAMANIAM : The hon. Member is referred to the paper placed on the table of the House in answer to Legislative Assembly Question No. 536 given notice of by Sri M. S. Selvarajan, M.L.A.

Sri A. A. RASHEED : Do the Government inspect the orphanages now and then?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Certain officers concerned do make an inspection of these institutions.

Sri T. T. DANIEL : From the paper placed on the table of the House I find that the grant paid to Infant Jesus Orphanage, Mulagamoodu, is the lowest in the whole State and the number of orphans in that orphanage is also large compared to other orphanages in the State. Will the Hon. Minister be pleased to go into the question and give more grants to that orphanage in view of the fact that they are doing really humane service for the last fifty years?

---

a Printed as Appendix II on pages 116–120 infra.

[3rd April 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member would write to me making out a case for larger grants for that institution, Government will go into the question.

SRI M. S. SELVARAJAN : தனிப்பட்டவர்களோ, ஸ்தாபனங்களோ, நடத்துகிற அனாதை இல்லங்களுக்கு எந்த அடிப்படையில் அங்கீகாரம் அளிககப்படுகிறது, கிராண்டு வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார் நேரடியாக அனாதை இல்லங்களை நடத்துவது இல்லை. தனிப்பட்ட நபரோ ஸ்தாபனமோ நடத்தும் இல்லங்களுக்குத்தான் ஆதரவு அளித்துக் கொண்டு வருகிறது. அதைப்பற்றி மனு வந்தால், அதைப் பரிசீலனை செய்து, ஆதரவுக்கு உரியது என்று ஏற்பட்டால் ஆதரவு அளிக்கப்படுகிறது.

SRI K. B. S. MANI : மேஜைமேல் வைக்கப்பட்டிருக்கும் லிஸ்டைப் பார்த்தால், பெரும்பாலும் இப்படிப்பட்ட அனாதை இல்லங்களை கிறிஸ்துவ மதத்தினர் நடத்துவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட கிறிஸ்தவ அனாதை இல்லங்களிலே சிறுவர்களை எடுத்துக்கொண்ட பிறகு, அவர்களைக் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்ற பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், யார் அனாதை இல்லங்களை நடத்தினாலும் இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது அங்கே அனாதைகளைச் சேர்த்துக் கொள்ளுகிறார்களா என்பது. அனாதைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது முக்கியம். எந்த மதத்தினர் அனாதை விடுதிகளை நடத்த முன் வந்தாலும், அவர்களுக்கு உதவி அளிக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணருவார்கள்.

SRI T. S. RAMASWAMY PILLAI : As my hon. Friend pointed out for a strength of 160 pupils only a grant of Rs. 500 was given while for other institutions with a lesser strength grants of Rs. 10 or Rs. 12 thousands are given. May I know on what principle this grant is given?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I can only state the general principles. I do not have with me particulars relating to each institution. The boarding grant towards boarding charges for destitute children is limited to three-fourths of the net boarding charges of the institution concerned, subject to a maximum calculated at Rs. 8 for each certified destitute pupil in the case of institutions in places other than hill stations and Rs. 12 for each pupil in the case of institutions functioning in hill stations.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மேஜை பேரிலே வைக்கப்பட்டிருக்கும் லிஸ்டைப் பார்க்கும்போது, 75 சத விகிதம் உள்ள அனாதை விடுதிகள் அத்தனையும் கிறிஸ்துவ மதத்தை வளர்க்கக் கூடிய அனாதை விடுதிகள். ஆகவே, ஜாதி, மதம் இன்னும் எந்தவித பாகுபாடும் இல்லாமல், எல்லா ஏழை மக்களையும் வைத்துப் பாதுகாக்கக்கூடிய அனாதை விடுதிகள் மட்டிலும்தான் இருக்கவேண்டும். அப்படி நடத்தவேண்டும் என்ற ஒரு நிபந்தனையின் பேரிலே அங்கீகாரமும் கிராண்டும் கொடுப்பதற்கு முன்வருவார்களா ? இல்லையென்றால், கிறிஸ்துவ மதத்தை வளர்ப்பதற்காக வேண்டித்தான் நாம் சர்க்காரிலிருந்து கிராண்டு கொடுப்பது போலாகும் அல்லவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களைத்தான் சேர்த்துக்கொள்வது, மற்றவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாது என்ற நிபந்தனையை அரசாங்கம் ஒத்துக் கொள்வது இல்லை.

3rd April 1958]

ஆனால், ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் இல்லம் நடத்தினால், அவர்கள் மற்ற மதத்தைச் சேர்ந்த அனாதைகளையும் சேர்த்துக்கொள்வார்கள். அப்படிச் சேர்த்துக் கொள்ளவில்லை யென்றால், அதற்கு அவர்களேதான் பொறுப்பாவார்கள்.

Sri K. ANBAZHAGAN : இத்தகைய அனாதை விடுதிகள் அனாதைகளை நல்ல முறையிலே பாதுகாப்பதற்காகத் ஏற்பட்டவைகள். இராமநாதபுரம் மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் அனாதைகள் மிகுதியாக இருந்தும் அங்கே அப்படிப்பட்ட விடுதிகள் நிறைய இல்லை. அப்படிப்பட்ட மாவட்டங்களில் அரசாங்கமே முன்வந்து அனாதை விடுதிகளைத் திறப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அரசாங்கமே நேரடியாக அனாதை இல்லங்களை நடத்துவது இல்லை என்று சொன்னேன். இனி நடத்துவதாகவும் உத்தேசம் இல்லை. தனிப்பட்டவரோ, ஸ்தாபனமோ இராமநாதபுரம் ஜில்லாவில் முன்வந்தால் வேண்டிய உதவியை அரசாங்கம் அளிக்கும்.

Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN : ஜாதி, மத பாகுபாடு இல்லாமல் குழந்தைகள் இல்லம் நடத்தினாலும், எப்படி நாம் பள்ளிக் கூடங்களிலே ஒரு குறிப்பிட்ட மத போதனை கட்டாயமாக இருக்கக் கூடாது என்று சொல்கிறோமோ, அதே போல், மத மாற்றத்திற்காக குழந்தைகள் இல்லங்களை அவர்கள் பயன்படுத்துவது இல்லை என்பதை சர்க்கார் கண்காணித்து வருகிறது உண்டா ? நான் கிறிஸ்தவ மதத்தினர் நடத்தும் இல்லங்களை மட்டும் சொல்லவில்லை ; எந்த மதத்தினர் நடத்தினாலும் மத மாற்றத்திற்கு பயன்படுத்தக்கூடாது. ஹிந்து மதத்தினர் நடத்தினாலும் கிறிஸ்தவக் குழந்தைகளை எடுத்துக் கொள்ளுகிறார்கள். அங்கே மதம் மாற்ற முயற்சிகள் நடப்பதாக எனக்குத் தெரியாது. அது போல், கிறிஸ்துவ மதத்தினர் நடத்தும் இல்லங்களிலே எல்லா மதக் குழந்தைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும்—சர்க்கார் சட்டத்திற்கு உட்பட்டு. ஆனால், அதே சமயத்தில்—மதப் பிரசாரத்தைப்பற்றி நான் சொல்லவில்லை—அந்த இல்லங்களில் மத மாற்றம் நடக்கிறதா என்பதைக் கண்காணித்துக் கொள்ள அரசாங்கம் முயற்சி செய்யுமா ? சூபர்விஷன் மூலமாகவும், புள்ளிவிவரங்கள் சேகரிப்பது மூலமாகவும் கண்காணித்துக் கொள்ளப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது விஷயத்தில் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். மத மாறுதல் என்றால் நேரடியாக குற்றம் சாட்டமுடியாது. இருக்கும் சூழ்நிலையை ஒட்டி ஒரு மனோபாவம் வளரலாம். இதையெல்லாம் தவிர்க்க முடியாது. ஆனால், அக்கறை உள்ளவர்கள் வேறு இல்லங்கள் அமைத்து, அவைகளிலே இம்மாதிரி மத மாற்றங்களுக்கு இடம் இல்லாமல் செய்து கொள்ளலாம்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : இந்த அனாதைக் குழந்தைகள் எவ்வளவு வயது வரையில் இந்த ஆஸ்ரமங்களில் வைக்கப்படுகிறார்கள், அதற்குப் பிறகு அவர்களுடைய எதிர்காலம் எப்படி வகுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தனியாக ஒரு கேள்வி போட்டால் அதற்குப் பதிலளிக்கலாம். கொஞ்சம் படிப்பு சொல்லிக் கொடுத்து, தொழிலும் சொல்லிக் கொடுத்து, அவர்கள் பின்னால் வாழ்க்கையிலே ஈடுபடக்கூடிய ஒரு அடிப்படையிலேதான் இந்த ஆஸ்ரமங்கள் அமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

Sri A. VEDARATNAM : அனாதைப் பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டியது அவசியமான கடமை, அதில் மதத்தைப்பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை என்றாலுங்கூட, விவரம் தெரியாத சிறுவர்களை, மைனர்களை, இம்மாதிரி அனாதை இல்லங்களின் மூலம் மதம் மாற்றுவது தவறு என்று தடை உத்தரவை அரசாங்கம் விதிக்க முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன். இதை நேரடியாக ஒருவர் மீது குற்றம் சாட்டி, தடை உத்தரவு

போட்டால், அதற்குப் பிறகு அதை நிரூபிக்கவேண்டும். ஆனால், எத்தகைய மத மாறுதல்கள் இருந்தாலும், அனாதைகள் கவனிப்பாரற்று கெட்டுப்போவதைவிட, சமுதாயத்திற்கு ஆபத்தை விளைவிப்பதைவிட, அவர்களை யாராவது பாதுகாத்தால் அது முற்றிலும் வரவேற்கப்பட வேண்டியது என்று நான் சொல்வேன்.

SRI M. JAGANNATHAN : ஆண்களுக்கான அனாதை இல்லங்களுக்குக் கொடுக்கப்படும் மான்யத்தைவிட, பெண்களுக்கான அனாதை இல்லங்களுக்கு அதிகமான மான்யம் ஒதுக்குவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் அவசியம் இருப்பதாக சர்க்கார் கருதவில்லை.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : எங்கே அதிகமாக குழந்தைகள் விடுதிகள் தேவை இருக்கிறதென்றால் பிற்போக்கான இடங்களிலும், ஏழைகளாக இருப்பவர்களுடைய வட்டாரங்களிலும்தான். அப்படிப்பட்ட பிற்போக்கான வட்டாரங்களிலும், ஏழைகளே பெரும்பாலும் வசிக்கக்கூடிய இடங்களிலும் இப்படிப்பட்ட இல்லங்கள் வைப்பதற்கு முயற்சி எடுப்பதே இல்லை. ஆகவே, அப்பேர்ப்பட்ட இடங்களிலேயும், ஹரிஜனங்கள் வாழக்கூடிய பகுதிகளிலேயும் இப்படிப்பட்ட விடுதிகளை சர்க்கார் ஆரம்பிப்பார்களா ? பிற்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலேயும், ஜனங்களுடைய ஆர்வம் இல்லாத பகுதிகளிலேயும் மட்டுமாவது சர்க்கார் இந்த விடுதிகளை ஆரம்பிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் சிறந்த ஸ்தாபனங்களை மிகுந்த ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அம்மாதிரி மற்றவர்களுக்கு முடியவில்லையென்றாலும், கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இன்னும் எவ்வளவோ ஆசை உண்டு, இன்னும் பல ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதிலே. இப்படிப்பட்டவைகளை நடத்துவதைத் தனியார் துறையிலே விடவேண்டும் என்பதும், அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்பதும் தான் அரசாங்கத்தினுடைய உத்தேசம்.

SRI M. S. SELVARAJAN : நான் முன்பு கேட்டபோது, எந்த அடிப்படையிலே அங்கீகாரம் அளிக்கப்படுகிறது, எந்த அடிப்படையிலே கிராண்டு வழங்குப்படுகிறது என்று கேட்டேன். அதை மீண்டும் கேட்பதற்கு ஆசைப்படுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த அடிப்படையிலே கிராண்டு வழங்கப்படுகிறது என்று நான் முன்பே பதில் சொன்னேன். சாதாரணமாக ஒரு மாணவனுக்கு எட்டு ரூபாய்க்கு அதிகப்படாமல், முக்கால் பங்குசெலவுத்தொகை அளிப்பது உண்டு. மலைப்பிரதேசத்தில் 12 ரூபாய் வீதம் அளிக்கப்படுகிறது. ஸ்தாபனம் ஒழுங்காக நடைபெறுகிறது என்று மனுப் போட்டால், அதைப் பரிசீலனை செய்து அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

Minimum Wages Act

* 538 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to implement section 3 (*a*) of the Minimum Wages Act, 1948, regarding fixation of minimum wages for employment in agriculuture in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : As early as in 1952, the Government conducted an enquiry in 48 villages with a view to determine the low wage pockets in this State and to define legal minimum rates of wages for different categories of agricultural labour. Based on the results of the enquiry the Government published a notification in December 1952, proposing the rates of